# TNPL TAMILNADU NEWSPRINT AND PAPERS LIMITED

## INTEGRATED MANAGEMENT SYSTEM POLICY

Tamil Nadu Newsprint and Papers Limited **(TNPL),** Tamil Nadu, India, manufacturers of Pulp, Paper, Paper Board, Cement and Paper Core Pipes, as part of implementing its Integrated Management System is committed to

- **Design, Manufacture and Supply** of quality products by adapting contemporary technologies for the overall efficiency in a clean environment.
- **Achieve** Quality, Energy, Environment, Health and Safety objectives through sustained R & D efforts and process improvements.
- **Ensure** continual improvements in the process and technology to attain consistent Quality, optimized Energy utilization, Environmental protection, sustaining Occupational Health and Safety Management Systems.
- **Comply** with all legal and other requirements, Report the Environmental performance of its facilities and compliance on all relevant environment legislation and regulation to the interested parties.
- **Stimulate** rational usage of Water, Energy and other Natural Resources through technological improvements and behavioural aspects.
- **Enhance** customers satisfaction by supply of quality products at optimal cost and timely delivery.
- **Maximize** recycling of water and minimize solid waste generation through deploying advance technologies and economically viable methods, to ensure sustainable growth.
- **Provide** safe and healthy work environment for the prevention of work-related injury and ill health.
- **Eliminate** hazards and reduce Occupational Health & Safety risks by conducting safety audit and risk assessment periodically.
- **Ensure** consultation and participation of workers or workers' representatives in sustaining Occupational Health and Safety Management System.
- **Empower** employees to work towards contributing to and improving the Integrated Management System in the organization.
- **Integrate** Quality, Energy, Environment, Health and Safety requirements with business decisions by adapting the Manufacturing Excellence Model.
- **Sustainable** managing farm forestry and plantations for sustainable supply and promote community.

This Integrated Management System Policy is communicated to all employees, stakeholders, and interested parties. It is reviewed periodically to ensure its ongoing suitability, effectiveness, and alignment with our business objectives.

**Issue No: 03**
**November 06, 2023**

**Dr. M. Sai Kumar I.A.S**
**Chairman & Managing Director**

# TNPL தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

## ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பு கொள்கை

இந்திய திருநாட்டில், தமிழகத்தில் காகிதக் கூழ், காகிதம், காகித அட்டை, சிமெண்ட், காகித உருளை குழாய் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தனது ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பினை செயல்படுத்துவதின் ஒரு பகுதியாக கீழ்க்காணும் கொள்கைகளை கடைப்பிடிக்க உறுதி பூண்டுள்ளது.

- தூய்மையான சூழலில் தற்கால தொழில்நுட்பத்தை கடைபிடித்து முழுத்திறனுடன் கூடிய தரமான உற்பத்திப் பொருட்களை வடிவமைத்து, தயாரித்து, வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.
- தரம், ஆற்றல், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் நோக்கங்களை நிலையான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் செயல்முறை மேம்பாடுகள் மூலம் அடைதல்.
- தனது செயல்முறை மற்றும் தொழில்நுட்பங்களில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உட்புகுத்தி நிலையான தரம், உகந்த ஆற்றல் நுகர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு ஆகியவற்றின் நிலைத்தன்மையை உறுதிசெய்தல்.
- சுற்றுச்சூழலுக்கு தேவையான அனைத்து சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை கடைபிடித்து, ஆலையின் பல்வேறு இயக்க நிலையங்களின் செயல்திறன், சுற்றுச்சூழலுக்கு தேவையான ஆய்வுகள், சுற்றுச்சூழலுக்கு எதிர் நடவடிக்கைகள் மற்றும் இணக்கம் அல்லாத செயல்கள் ஏதேனும் ஏற்படின் அதை அறிக்கையாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிவித்தல்.
- மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நடைமுறை அம்சங்களில் முன்னேற்றம் ஆகியவற்றின் மூலம் தண்ணீர், ஆற்றல் பயன்பாடு மற்றும் இதர இயற்கை ஆதார வளங்களை சரியான முறையில் உபயோகிக்க தேவையான உந்துதலை ஏற்படுத்துதல்.
- வாடிக்கையாளர்களின் திருப்தியை அதிகரிக்கும் வகையில் தரமான பொருட்களை உகந்த விலையில் உரிய நேரத்தில் அவர்களிடம் விநியோகித்தல்.
- நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, மேம்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான முறைகளை பயன்படுத்துவதன் மூலம் கழிவுகளை குறைத்தல் மற்றும் மறுசுழற்சி/மறுஉபயோகத்தை அதிகரித்தல்.
- பணிகள் தொடர்பான காயங்கள் மற்றும் உடல்நலக் குறைவைத் தடுப்பதற்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலை ஏற்படுத்துதல்.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் பாதுகாப்பு தணிக்கை மற்றும் ஆபத்து மதிப்பீடுகளை நடத்துவதன் மூலம் அபாயகரமான சூழலை நீக்குவதும், தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு குறித்த அபாய நேர்வுகளைக் குறைத்தல்.
- தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு மேலாண்மை முறையைத் தக்கவைத்துக் கொள்வதில் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர் பிரதிநிதிகளின் ஆலோசனை மற்றும் பங்களிப்பை உறுதிசெய்தல்.
- நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பினை மேம்படுத்த தேவையான பங்களிப்பு மற்றும் செயல்முறைகளை கடைப்பிடிக்க தேவையான அதிகாரங்களை ஊழியர்களுக்கு அளித்தல்.
- சிறந்த உற்பத்தி மாதிரியை அடிப்படையாக கொண்டு தரம், ஆற்றல், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை பேணுவதற்கான தேவைகளை தனது வணிகரீதியான தீர்மானங்களை மேம்படுத்துதல்.
- நிலையான மேலாண்மை மூலம் சமூகத்தை மேம்படுத்துவதற்காக பண்ணை காடுகள் மற்றும் தோட்டங்களை அமைத்தல்.

இந்த ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பு கொள்கை அனைத்து பணியாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினருக்கும் தெரிவிக்கப்படுகிறது. அதன் தற்போதைய பொருத்தம், செயல் திறன் மற்றும் எங்கள் வணிக நோக்கங்களுடன் சீரமைக்கப்படுவதை உறுதிப்படுத்த அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

வெளியீடு எண்: 03
நவம்பர் 06, 2023

முனைவர் மு. சாய் குமார் இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்